யாழ்ப்பாணம் வட்டுமேற்கு வட்டுக்கோட்டையைப்
பிறப்பிடமாகவும், காரைதீவை வசிப்பிடமாகவும் கொண்ட



திருமதி.

ஞானாம்பிகை நாகேந்திரம்

அவர்களின்

# நினைவு மலர்

29 - 12 - 2001

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் வட்டுமேற்கு
வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும்,
காரைதீவை வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி.

# ஞானாம்பிகை நாகேந்திரம்

அவர்களின்

# நினைவு மலர்

29 - 12 - 2001

உ
சிவமயம்



# அமரர்
# திருமதி. ஞானாம்பிகை நாகேந்திரம்

## திதி வெண்பா

தாங்கு புகழ் விஷு வருட கார்த்திகை இருபத்தெட்டதனில்
தேங்கு வளர்பிறை திரயோதசி திதி தன்னில் ஓங்கு புகழ்
வட்டு நகர் வந்துதித்த ஞானாம்பிகை
நட்டநிறை பதமடைந்த நாள்

| | |
|---|---|
| அன்னையின் மடியில் | இறைவனடியில் |
| 11 - 12 - 1924 | 28 - 11 - 2001 |





தாய் தந்தையருடன் ஞானாம்பிகை

# எம் இனிய தெய்வத்திற்கு
## சமர்ப்பணம்

அன்புடன் எம்மைப் பேணிக் காத்து குடும்ப

ஒளி விளக்காய்த் திகழ்ந்து பண்பான

பிள்ளைகளாய் எம்மை வழி

நடத்தி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று

வானுறையும் தெய்வமாகி விட்ட எமது

அன்புத் தாயின் பொன்னடிகளுக்குச்

சமர்ப்பிக்கின்றோம்.

**கணவன், மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரு
முடிவிலொரு பிடி சாம்பலாய் வெந்து
மண்ணாவதுங் கண்டு மிந்தப் படி சார்ந்த
வாழ்வை நினைப் பதல்லாற் பொன்னினம்
பலவர் அடிசார்ந்து நாமுய்ய வேண்டு
மென்றேயறிவாரில்லையே

**(பட்டினத்தார்)**

உ
சிவமயம்
"திருச்சிற்றம்பலம்"

## தேவாரம்

பிடியதனுருவுமை கௌமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினை மிகுகொடை
வடிவிளர் பயில்வலி வல முறையிறையே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலாப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பல ஆடரங் காகத்
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஆதியாய் நடுவு ஆகி அளவிலா அளவு ஆகிச்
சோதியாய் உணர்வு ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் திருவாயே
குறமாதைப் புணர்வோனே! குகனே சொற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## தேற்றம்

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலு
மாண்டார் வருவாரோ மாநிலத்தீர் - வேண்டா
நமக்கு மது வழியே நாம் போமளவு
மெமக் கெள் ளென் றிட்டுண் டிரும்.

**ஔவையார்**

திருச்சிற்றம்பலம்



# சிவபுராணம்

## (சிவனது அநாதி முறையாமையான பழமை)
## கலி வெண்பா

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழிஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்(று) அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!

வேகம் கெடுத்(து) ஆண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி! சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி!
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்(கு) எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய்! விளங்(கு) ஒளியாய்
எண்இறந்(து) எல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா(று) ஒன்றறியேன்

புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம் ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லா பிறப்பும் பிறந்(து) இளைத்தேன் எம்பெருமான்!
மெய்யேயுன் பொன்னடிகள் கண்(டு) இன்று வீடுற்றேன்;
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா, எனஓங்கி ஆழ்ந்(து)அகன்ற நுண்ணியனே!

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா!
பொய்யா யினஎல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!

ஆக்கம் அள(வு) இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்! சேயாய் நணியானே!
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே!

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்(து)அடியார் சிந்தையுள் தேன்ஊறி நின்ற
பிறந்த பிறப்(பு)அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்(து)உடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்(து) எங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோறும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப்புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்(து)உள் உருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே
மா(சு)அற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேன்ஆர் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்(று) அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!
ஆராஅமுதே! அளவு இலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே, உள்ளானே!

அன்பருக்(கு) அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே! துன்இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்த்(து) என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே!
காக்கும்எம் காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்(று)இன்ப வெள்ளமே! அத்தாமிக் காய்!நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே!என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே!
வேற்று விகார விடக்(கு) உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா! அரனே!ஓ வென்(று)என்று

போற்றிப் புகழ்ந்(து)இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்(டு)இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்(டு)அழிக்க வல்லானே!
நள்இருளில் நட்டம் பயின்(று)ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே!

அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்(கு) அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



# கந்த சஷ்டி கவசம்

(தேவராய சுவாமிகள் அருளியது)

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

## செந்தில் மேவும் சரவணன்

*சஷ்டியை நோக்கச் சரவண பவனார்*
*சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்*
*பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை*
*கீதம் பாடக் கிண்கிணி யாட*
*மைய நடஞ்செயும் மயில்வா கனனார்*
*கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து*
*வரவர வேலா யுதனார் வருக*
*வருக வருக மயிலோன் வருக*
*இந்திரன் முதலா எண்டிசை போற்ற*
*மந்திர வடிவேல் வருக வருக*
*வாசவன் மருகா வருக வருக*
*நேசக் குறமகள் நினைவோன் வருக*
*ஆறுமுகம் படைத்த ஐயா வருக*
*நீறிடும் வேலவன் நித்தம் வருக*
*சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக*
*சரவண பவனார் சடுதியில் வருக*
*ரவண பவச ரரரர ரரர*
*ரிவண பவச ரிரிரிரி ரிரிரி*

விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர்குடி கெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்னமாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணை முழந்தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொக மொக மொகமொக மொகென
நகநக நக நக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர

ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்று
உன்திருவடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவியிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருப்பல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க

பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரசுவதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூன்யம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்.
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்

என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன்சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெறி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி

பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளிபவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பதுன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய் பிரியமளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுட னொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உவந்து நீறணிய
அதிஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னரெண்மர் செயலதருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கசவத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப்பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி

அறிந்து எனதுள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமுளித்த
குருபரன் பழநிக் குன்றினிலிருக்கும்
சின்ன குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

கவசம் முற்றிற்று



# கௌரி காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய் புனைவதற்கு
என்னின்று அருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்றமொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வராமற் கா

✡✡✡✡

காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்மாள் தாயாளே
காத்தென்னை தோற்றிடுவாய் காளி மகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோல் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்.
காளி மகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷா சுரனை கூறு போட்டவளே
அசுரர் குணம்யாவும் அழிக்கும் சுடர் கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்லோ பதிவிரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பு இருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பு இருந்தாய்
ஐங்கரனை பெற்றவளே அன்று நீ நோன்பு இருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனை அனைத்தே அருள் மாரி பொழிந்தானே
வகையாற்று படலமிதை வழிவழியாய் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டி வாய்
காப்பை புனைந்துவிடு கால பயம் ஓட்டிவிடு

நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விளை காப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நற்காப்பு அருளுமம்மா
பிள்ளைகள் அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நாம் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைய தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடன் பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல வகை திரவியங்கள்
நானுனக்குத் தாரேனம்மா நயந்தென்னை காருமம்மா
காளிமகா தேவியரே காசினுக்கும் வந்தவளே
வித்தை விதைப்பவளே வினை காக்கும் காப்பவளே
என்தாயே வாழ்ந்திடுவோம் எல்லாம் உனதருகே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றி விட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியளே
காப்பெனக்கு போட்டுவிட்டாள் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்ட தெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோருக்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவிடும்
நாள் கோள் இவை எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமம் பூச்சவளே சூலக் கொழுந்தே கௌரி அம்மா

காப்பினைக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறும் காப்பு கட்டதெனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுது தெழுந்து காப்பதில் விழித்திடுவேன்
ஞானக் கொழுஞ்சுடரே காளியுனைக் காணுகிறேன்
காப்பெனக்கு கையில் பூண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டாள் எரி போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலேதும் கண் திறந்து காட்டுமம்மா
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபத்தொரு நாள் வரையில் இசையும் விரதமொடு
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண் திறந்து காட்டுமடி
பக்தி மனதோடு பரவி அணிவோருக்கு
சித்தி யெலாம் தருவாள் சீர்பெருகு கெளரி அவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால முணர்வுமுண்டு
இச்சகத்தில் உள்ளோர் எல்லாம் ஏற்றிமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலக்கமொடு வந்திடவே
அச்சக்தி யெல்லாம் அருள்வாள் கெளரியவள்
கெளரி காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவிட
ஞானம் கிளர்ந்துவர நல்லருளைச் செய்திடுவாய்
தெவிட்டாத தீங்கனியே தேவிபராசக்தியம்மா
காளியாய் வந்தமர்ந்த கெளரியம்மா காப்பருள்வாய்



# வாழ்க்கை வரலாறு

ஈழவளநாட்டின் யாழ்ப்பாணத்தின் வட்டுக்கோட்டையில் உயர்சைவ வேளாளர் குல பிரபு இராசபல்லவ முதலியார் வழித்தோன்றிய தாமோதரம்பிள்ளை நீலாயதாட்ஷியும் தினநாயக முதலியார் வழித் தோன்றிய திரு. அருணாசலம் முத்துவேலு (முன்னாள் புகையிரத நிலைய அதிபர், மலாயா) அவர்களும் வாழ்ந்த சிறப்பான வாழ்வின் பயனாக நகுலாம்பிகை, ஞானாம்பிகை, கமலாம்பிகை, கனகாம்பிகை, இரத்தினாம்பிகை எனும் ஐந்து பெண் குழந்தைகளும் ஆசைக்கோர் ஆண்மகவாக சண்முகநாதன் (தவம்) என்பவரையும் பெற்று அகம் மகிழ்ந்தனர் (முன்னாள் ரிட் உடையார்). இவர்கள் இரண்டாவது மகளான ஞானாம்பிகை 11. 12. 1924ம் ஆண்டில் பிறந்தார். இவருக்கு பேபி என்று வீட்டுப்பெயர் சூட்டி ஊரெல்லாம் பேபி என்று அன்புடன் அழைத்தனர். சிறு வயதிலிருந்தே மிகவும் அமைதியும், பண்பும் நிறைந்த இவர் யாவருடனும் தன் குடும்பத்தார் போல் அன்புடன் பழகுவார்.

தந்தையார் மலாயாவில் தொழில் புரிந்தபடியால் பத்து(10) வயது வரை அவருடன் கூட இருந்து தமது கல்வியை சிறம்பான் கொன்வென்ற், கோலாலம்பூரில் ஆங்கில மொழி மூலம் கற்று வந்தார். 1935ம் ஆண்டில் தாயாரின் நாடு திரும்ப வேண்டுமென்ற ஆசையின் விளைவாக வட்டுக்கோட்டை வந்து, அங்குள்ள அமெரிக்க மிஷன் ஆங்கிலப் பாடசாலையான யாழ்ப்பாணக் கல்லூரியில் தமது கல்வியைத் தொடர்ந்தார். மிகவும் சிறப்பாகக் கல்வி கற்று, ஆசிரியர்களால் விரும்பிப் போற்றப்பட்ட அவரைப் பெற்றோர் தொழில் பார்க்க அனுமதிக்கவில்லை. பப்பா என்று இவர் உயிரையே வைத்திருந்த தந்தையார் இவரது பதினெட்டாவது வயதில் இவர்களைத் தவிக்க விட்டு மறைந்து விட்டார்.

தனது இருபத்தாறாவது வயதில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. நாகலிங்கம் நாகேந்திரம் **(R. F. O,** வனபரிபாலனத் திணைக்களம், அம்பாறை**)** அவர்களை மணம் செய்து கொண்டார்.

**"மங்களம் என்பது மனைமாட்சி, மற்றதன்**
**நன்கலன் நன்மக்கட் பேறு"**

என்ற திருவள்ளுவர் மொழிக்கிணங்க சந்திரகாந்தா, கமலாதேவி, விமலாதேவி, செல்வராணி, சந்திரவதனி, சகுந்தலா (லலிதா), ராகினி

எனும் பெண் குழந்தைகளையும் அவர் செய்த தவத்தின் பயனாக நாகபாலன்(கண்ணன்) எனும் ஆண்மகவையும் பெற்றனர்.

மூத்தமகள் சந்திரகாந்தா கு. விஜயராஜா (உரிமையாளர் ரவுன்ஷொப், திருகோணமலை) அவர்களைத் திருமணம் செய்து வத்ஷலா, விஜயகாந்தன் (லண்டன்), மஞ்சுளா (தேசிய நீர் வழங்கல் - திருமலை) எனும் மூவரைப் பெற்றனர். மூத்தமகள் வத்ஷலா பிரதீப்குமார் அவர்களைத் திருமணம் முடித்தார். கமலாதேவி மகாதேவா (ஓய்வுபெற்ற எலக்றிக்கல் போர்மன், உடவளவை) அவர்களைத் திருமணம் முடித்து தனுஷியன் (வி. ம. ம. வித்தியாலயம், காரைதீவு பழைய மாணவன்) சியாமளா (வி. ம. ம. வித்தியாலயம், காரைதீவு) எனும் இரு மக்களைப் பெற்றனர். விமலாதேவி க. சிவயோகன் (கூட்டுறவு மனேஜர், ஆலையடிவேம்பு ப. நோ. கூ. சங்கம், அக்கரைப்பற்று) அவர்களைத் திருமணம் முடித்து துஷிதா எனும் பெண் மகவைப் பெற்றனர். செல்வராணி (நூலகர், யாழ்ப்பாணம்) **T.** பாக்கியநாதன் (சட்டத்தரணி) அவர்களைத் திருமணம் முடித்து யதுகுலன், சிறிகுகன் எனும் இரு மக்களைப் பெற்றனர். ஐந்தாவதாக சந்திரவதனியையும் ஆறாவதாக சகுந்தலா (**E. C. G.** இயக்குனர் அரசினர் வைத்தியசாலை கல்முனை) ஏழாவதாக ராகினி (ஆசிரியை, சரஸ்வதி வித்தியாலயம், தம்பிலுவில்) சி. விநாயகமூர்த்தி (ஆசிரியர், **M. M. C. M. S**, திருக்கோவில்) அவர்களைத் திருமணம் முடித்து சபேசன் (மாணவன், ம. ம. வி, தம்பிலுவில்) தனுஷியா (மாணவி, ம. ம. வி, தம்பிலுவில்) எனும் இரு மக்களைப் பெற்றனர். நாகபாலன்(கண்ணன்) (தேசிய நீர் வழங்கல் சபை, திருகோணமலை) உமா (தேசிய நீர்வழங்கல் சபை திருகோணமலை) அவர்களைத் திருமணம் செய்தார்.

பிள்ளைகளின் நலனுக்காக அம்பாறை வந்து வசித்த இவர் 1981ம் ஆண்டு முதல் காரைதீவை வசிப்பிடமாகக் கொண்டு அங்கேயே வாழ்ந்து வந்தார். கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என்ற பூஞ்சோலையில் ஆனந்தமாக எல்லோருடனும் அன்புடன் வாழ்ந்தார்.

28. 11. 2001 விஷு வருஷம் கார்த்திகைப் புதன்கிழமை வளர்பிறை திரயோதசி திதியில் இறைவனடி சேர்ந்தார்.

அம்மையாரின் ஆத்மா சாந்தி அடைய பரம்பொருளாகிய சிவபெருமானைத் துதி செய்வோமாக.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

## கணவர் புலம்பல்

பேபி பேபி என் அன்பு மனைவியே
சொல்லாமல் கொள்ளாமல் எங்கு சென்றாய் நீ
திருமணம் செய்த நாள் முதற்கொண்டு
அன்புடன் என்னைப் பேணிக்காத்தாய்
நான் ஏதும் பிழைகள் செய்திட்ட போதும்
ஒருபோதும் என்னை நீ வெறுத்ததில்லை
நாம் எட்டுப் பிள்ளைகள் பெற்றிட்ட போதும்
நீ தானே சுமந்தாய் குடும்பம் எல்லாம்
என் குடும்ப விளக்கே லக்ஷ்மியே
எம்மை விட்டுச் செல்ல உனக்கெப்படி மனம் வந்தது

பேபி உனைப் பிரிந்து தவிக்கின்றேன்
கதறியழும் மக்களுக்கு என்ன பதில் சொல்வேன்
பூவுடனும் பொட்டுடனும் வைகுந்தம் செல்லவேண்டுமென்றோ
என்னைத் தவிக்க விட்டு நீ மறைந்தாய்
இத்தனை நாள் வாழ்ந்த என்னிடம் சொல்லாமல்
திடீரெனப் புறப்பட உனக்கென்ன அவசரமோ
உன் அன்பை நினைக்கிறேன் உன்
பொறுமையை நினைக்கிறேன் தாங்க முடியவில்லை
வைகுந்தம் ஏகி உன் ஆத்மா சாந்திபெறப்
பிராத்திக்கின்றேன்.

## பிள்ளைகள் புலம்பல்

அம்மா அம்மா திடீரென எங்கு மறைந்தாயோ
ஊரெல்லாம் தேடினோம் போன இடம் தெரியவில்லை
உன்னைப் போல் அன்னையை வேறெங்கும் கண்டதில்லை
என்ன குறை விட்டோம் சொல்லாமல் நீ போவதற்கு
எட்டுப் பிள்ளைகளை ஒரு பிள்ளை போல் வளர்த்தாய்
ஒரு போதும் அடித்ததில்லை சுடுசொல் சொன்னதில்லை
உன் சுகம் பாராது எம்மை வளர்த்திட்டாய்
எங்கள் நலனுக்காக ஊர் தேசம் விட்டு வந்தாய்
எங்கள் கல்விக்காகப் பல தியாகங்களைச் செய்தாய்

எமக்காக ஊரிலுள்ள கோவிலெல்லாம் சுற்றி
வந்தாய்

தியாக செல்வமே எம் வீட்டு லக்ஷ்மியே - நீ
படுக்கையில் இருந்து எம்முதவி வேண்டாது திடீரென
ஏன் மறைந்தாய்
உனைப் பிரிந்து தவிக்கிறோம் தாங்க முடியவில்லை
வழி தெரியாது கதறுகிறோம் ஏன் உனக்குக் கேட்கவில்லை

குறையேதும் விட்டிருந்தால் மன்னித்தருள்வாய் தாயே
துணையின்றி ஏங்குகின்றோம் தாயே நாம்
வைகுந்தம் செல்ல உனக்கென்ன அவசரமோ
எம் கண்ணீரை உனக்குக் காணிக்கை ஆக்குகின்றோம்

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

அம்மம்மா அம்மம்மா - எங்கு சென்றாயோ
உனைப்போல் அம்மாவை உலகெங்கும் கண்டதில்லை
ஓர் நாள் வைததில்லை ஒரு நாள் கூட அடித்ததில்லை
எமைப் பெற்றோர் வைதாலும் உமக்குத்தான் பிடிப்பதில்லை

ஆசையுடன் அணைப்பாய் ஆதரவாய் முத்தமிடுவாய்
எமைக் கண்டவுடனே உன் முகம் - ஒளிபெறுமே
ஐயோ தவிக்கின்றோம் தாங்க முடியலையே
இனி யாரைக் கூப்பிடுவோம் அம்மம்மா என்றே
அம்மம்மாக்குஞ்சு என்றே நாம் உனை அழைப்போம்
நீயும் எம்மை அணைத்திட்டே வரவேற்பாய்
ஆனால் ஒன்றும் சொல்லாது - எம்மை விட்டு
சிவபதமடைய உனக்கென்ன அவசரமோ
வைகுந்த மேகி உன் ஆத்மா சாந்தி பெற வேண்டுமென்றே

பிரார்த்திக்கின்றோம் நாமெல்லாம் ஒன்று சேர்ந்தே

## மருமக்கள் புலம்பல்

அம்மம்மா அம்மம்மா எமதன் பானமாமியே
உன்னைப்போல் மாமியாரை நாம் எங்கும் பார்த்ததில்லை

மருமக்களல்ல பெற்ற மக்களொன்பது போல்
பாசமுடன் எம்முடன் ஆதரவாய் பழகினீரே
பெற்ற தாயினை இழந்தது போல் தவிக்கின்றோம்
எம்மைத் தவிக்க விட்டுப் பரலோகம் போனீரோ
அன்புத் தெய்வமே பண்பான மாமியே
உனக்காய் அழுது இனித்தான் என்ன பயன்
உன் ஆத்மா சிவபதமடைய வேண்டுமென்று
வேண்டுகின்றோம் நாமெல்லாம் ஒன்று கூடி

## சகோதரர் புலம்பல்

அறுவர் நாம் பிறந்து அன்பாக வாழ்ந்து வந்தோம்
ஒருவன் பின் ஒருவராக நான்கு மலர்கள்
உதிர்த பின்பு உன்தனுக்கு நானும்
எனதனுக்கு நீயுமாக சகோதரர் நாம்
சகோதர வாஞ்சையுடன் வாழ்ந்துவந்தோம்
நீயும் என்னை விட்டு அவசரமாய்
சென்றுவிட்டாய் ஐயோ தாங்க முடிவில்லையே.

துடிக்கின்றேன் உன் பிரிவை எண்ணி
இனி வருங்காலம் எல்லாம் உன் நினைவில் வாழ்ந்திடுவேன்
உன் உடலைப் பார்க்கக் கூட
எனக்கு கொடுத்து வைக்கவில்லையே
அக்கா நீ வைகுந்தமேகி பரமனடி
சேர் பிரார்த்திக்கிறோம் குடும்பமே சேர்ந்து

# நன்றி நவிலல்

எமது அன்புத் தெய்வமாம் அன்னை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அவருடைய இறுதிக் கிரியையில் பங்கு பற்றியவர்களுக்கும் அதற்கு வேண்டிய ஒத்துழைப்பு நல்கியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவியோருக்கும் இன்று நடைபெற்ற கிரியைகளிலும் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்கு பற்றியோருக்கும் தொலைபேசி, தந்தி, தபால் மூலம் அனுதாபம் தெரிவித்த அன்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

**நன்றி**

இவ்வண்ணம்
**கணவன், பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**சகோதரன்**

முருகன் கோவில் வீதி,
காரைதீவு - 12



தி/ஸ்ரீ கணேச அச்சகம் ☎ 026-22617

